செய்தி வெளியீடு எண்:1332                                   நாள்:13.12.2021

# தமிழ்நாடு உயிரிப்பல்வகைமை வாரியம்

சென்னை தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு உயிரிப்பல்வகைமை வாரியத்தின் 10வது வாரியக் கூட்டம் மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.கா.ராமச்சந்திரன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. பின்னர் தமிழ்நாடு உயிரிப்பல்வகைமை வாரியத்தின் தலைவராக உள்ள மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள் உயிரியல்பன்மை பலன்களை அணுகுதல் மற்றும் பங்கிடுதல் மூலம் கிடைக்கப்பெற்ற தொகையான ரூ.37,32,179/-ஐ இராமநாதபுரம், தூத்துக்குடி, தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் உள்ள 21 உயிரிப்பல்வகைமை மேலாண்மை குழுக்களுக்கு வழங்கினார். இந்த தொகையானது Pepsi Co India Holdings Private Limited, Sea6 Energy Private Limited, Gurgeaon, Ganesan and Sons, Tuticorin, ஆகிய நிறுவனங்களிடமிருந்து தேசிய உயிரிப்பல்வகைமை ஆணையத்தின் மூலம் பெறப்பெற்று தமிழ்நாடு உயிரிப்பல்வகைமை வாரியத்திடம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் ரூ.15,55,110-ஐ தமிழ்நாடு உயிரிப்பல்வகைமை வாரியத்திற்கு தேசிய உயிரிப்பல்வகைமை ஆணையம் அணுகுதல் மற்றும் பலன்களை பங்கிடுதல் தொகையாக உயிரிப்பல்வகைமை சட்டம் 2002 பிரிவு 21 மற்றும் உயிரிப்பல்வகைமை விதிகள் 2004 விதி எண் 20ன் படி உயிரியல் வளங்களை ஆராய்ச்சிக்காக அணுகியதற்காக பெறப்பட்ட 10 விண்ணப்பங்களிலிருந்து இந்த தொகையை வழங்கியது. இதில் ரூ. 11,83,700/- தொகையை சம்மந்தப்பட்ட பயனாளிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு வனத்துறை அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

இவ்விழாவில் ரூ.45,60,480/-இவ்வாரியத்தின் மூலமாக 90 மாதிரி உயிரிப்பல்வகைமை மேலாண்மை குழுக்களுக்கு முதல் தவணையாக பகிர்ந்தளிக்கப்பட்டது. தேசிய உயிரிப்பல்வகைமை ஆணையத்தின் மூலமாக பெறப்பட்ட இத்தொகை மேற்படி உயிரிப்பல்வகைமை மேலாண்மை குழுக்கள் தொடங்குவதற்காக பயன்படுத்தப்படும். இவை மட்டுமின்றி மேற்படி

பெறப்பட்ட தொகை உயிரிப்பல்வகைமை மேலாண்மை குழு கூட்டங்கள் நடத்துவதற்கும் விழிப்புணர்வு கூட்டங்கள் நடத்துவதற்கும் மேற்படிநிதி பயன்படுத்தப்படும்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை தென்னிந்திய பஞ்சாலை அதிபர்கள் கூட்டமைப்பு மற்றும் ஆராய்ச்சி மேம்பாட்டு சங்கம், வேலூர் அப்துல் ஹக்கிம் கல்லூரி மற்றும் கடலூர் மாவட்டம் நெல்லிக்குப்பம் உயிரிப்பல்வகைமை மேலாண்மை குழு, திருவள்ளூர் மாவட்டம் பூண்டி உயிரிப்பல்வகைமை மேலாண்மை குழு மற்றும் செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள திருக்கழுகுன்றம் உயிரிப்பல்வகைமை மேலாண்மை குழுவின் பிரதிநிதிகள் மாண்புமிகு வனத்துறை அமைச்சரிடமிருந்து தொகையினை பெற்றனர். இவ்விழாவில் அரசு முதன்மை செயலாளர் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை, திருமதி. சுப்ரியா சாஹு, இ.ஆ.ப., அரசு கூடுதல் முதன்மை செயலாளர் கால்நடை பாராமரிப்பு பால்வளம் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, திரு.T.S.ஜவகர், இ.ஆ.ப., அரசு முதன்மை செயலாளர் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை திருமதி.P.அமுதா, இ.ஆ.ப., அரசு முதன்மை செயலாளர் வேளாண்மை மற்றும் உழவர்நலத்துறை திரு.C.சமயமூர்த்தி இ.ஆ.ப.. முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் துறைத் தலைவர் திரு.அசோக் உபரேதி இ.வ.ப., செயலாளர் தமிழ்நாடு உயிரிப்பல்வகைமை வாரியம் திரு. தெபாஷிஷ் ஜானா இ.வ.ப., செயலாளர் தேசிய உயிரிப்பல்வகைமை ஆணையம் திரு.J.ஜஸ்டின் மோகன் இ.வ.ப., வாரியத்தின் மற்ற உறுப்பினர்கள் நிரந்தர சிறப்பு அழைப்பாளர்கள் கலந்துகொண்டனர்.

செயலாளர்
தமிழ்நாடு உயிரிப்பல்வகைமை வாரியம்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**